முருகப்பெருமான் துணை

**மகான் ஆண்டாள் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.09.2022**, வியாழக்கிழமை

1. ஞானவான்களை படைக்க வேண்டி
ஞானிகள் பூசைதனை துவக்கி
ஞானயுகமாற்றம் செய்ய வந்த
ஞானதேசிகனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறைவிலா மூவையோர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 16 நாள், 01.09.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு ஆண்டாள் யானும் உரைப்பேன்
3. உரைக்கவே உலகோர் நலம்பெற
உண்மை தத்துவம் தருகின்ற
மறைபோற்றும் அரங்கமகான்
மலரடிப் பற்றி மக்களெல்லாம் வர
4. வருகவே முக்குண பேதங்கள்
வளரா கட்டுக்குள் வந்து
தரும சிந்தையும் தெளிவும்
தயவான வாழ்வு முறையும் கைகூடி
5. கைகூடி கலியுக மக்களெல்லாம்
கருமவினைகளை வென்று
தேகமனோ பலமும் கூடி
தேசிகன் வழி திருவருளை அடைவர்
6. அடையவே அகிலம் வெல்லும்படி
அழியாமையாக வரும் ஞானவரம்
தடையற கைவரப் பெற்று
தரணியோர் ஞானிகளாவர்
7. ஆவரே ஞானவான்கள் பலரை
அரங்கன் ஆசிபட உருவாக்கி
அவனியில் ஞான ஆட்சி தருவர்
அரங்கர் மயமாக உலகை மாற்றுவர்
8. மாற்றம்தனை மண்ணுலகம் ஏற்று
மாதருமம் கடைபிடிக்கப்பட
ஆற்றல்பட அரங்கன் சேவை
அளவிலா எங்கும் பரவிட
9. பரவிட இந்தப் பேருலகம்
பண்பாளர்களின் தலைமை
அறம் நிறைந்தவர்கள் சூழ்ந்த
ஆளுமையாக ஞான சபையாக

10. ஆகவே உலகம் மாற்றம் கண்டு
அற்புதம் தனை கண்டடையும்
மிகைபட ஞானவான்கள் கொண்ட
முதன்மை தேசமாக மாற்றம் நிகழ்ந்து

11. நிகழ்ந்து இந்திய தேசத்தின் வழி
நிலவுலகமே ஞானத்தலைமை கண்டு
சகல பாதுகாப்பும் கொண்டு திகழும்
சாற்றிய அருளாசி முற்றே

–சுபம்–